# 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

*நடைமுறைக் கணக்கிற்கான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாக இருந்தமை, அதிகரித்த மூலதன வெளிப்பாய்ச்சல் மற்றும் போதுமானதற்ற வெளிநாட்டு முதலீடுகள் என்பனவற்றின் காரணமாக இலங்கையின் வெளிநாட்டுத்துறை இவ்வாண்டுப்பகுதியின் இதுவரையான காலப்பகுதியில் தொடர்ந்தும் அழுத்தத்திற்குள்ளானது. வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட கணிசமான விரிவாக்கம் மற்றும் முதலாந்தர வருமானக் கணக்கில் காணப்பட்ட பற்றாக்குறை என்பனவற்றினைத் தொடர்ந்து 2018இன் முதலரைப்பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 1,037 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,813 மில்லியனுக்கு அதிகரித்தது. ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டமைக்கிடையிலும் குறிப்பாக எரிபொருள், ஊர்திகள் மற்றும் தங்கம் என்பனவற்றின் மீதான உயர்ந்த இறக்குமதிச் செலவினத்தினால் தூண்டப்பட்ட இறக்குமதியில் ஏற்பட்ட கணிசமான வளர்ச்சியின் காரணமாக 2018இன் முதலரைப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை கணிசமானளவிற்கு விரிவடைந்தது. பங்கிலாபம் மற்றும் வட்டி நியதிகளில் அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்கள் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையின் விரிவாக்கத்திற்கு இட்டுச்சென்றன. எனினும், பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் காணப்பட்ட மிகைகள் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையில் காணப்பட்ட பாரிய விரிவினைக் குறைப்பதற்கு உதவியது. அதேவேளை, சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு நாட்டிற்கான இரண்டு பன்னாட்டு முறிகளின் வழங்கல், பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதி மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பனவற்றின் பெறுகைகளின் காரணமாக பெருமளவிற்கு அதிகரித்தது. எனினும், உயர்ந்தளவு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மற்றும் மத்திய வங்கியின் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி விற்பனைகள் என்பன 2018 செத்தெம்பர் இறுதியில் சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவையில் ஐ.அ.டொலர் 650 மில்லியன் கொண்ட பற்றாக்குறையொன்றினைத் தோற்றுவித்தன. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 செத்தெம்பர் இறுதியில் 7.2 பில்லியனாக விளங்கி 3.8 மாத இறக்குமதிகளுக்குச் சமமானவையாக இருந்தன. 2018இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்ட செலாவணி வீதம் அதன் பின்னர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் காரணிகளினால் குறிப்பிடத்தக்க அழுத்தங்களுக்குள்ளாகி ஐ.அ.டொலருக்கெதிராக தேய்வடைந்தது. வெளிநாட்டுப் பக்கத்தில் உலகளாவிய நிதியியல் சந்தைகளில் அண்மையில் ஏற்பட்ட அபிவிருத்திகள், குறிப்பாக பெடரல் றிசேர்வ் வங்கியின் கொள்கை வீதங்களில் அதிகரிப்புக்களைத் தூண்டிய ஐக்கிய அமெரிக்கப் பொருளாதாரம் வலுவடைந்து வருவது தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களிலுள்ள மூலதனச் சந்தைகளிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் வெளிப்பாய்வதனைத் தோற்றுவித்தது. இலங்கையும் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பனவற்றிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ச்சியாக வெளிப்பாயும் அனுபவத்தினைக் கொண்டிருந்தமையானது உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் குறைந்த திரவத்தன்மை மட்டங்களைத் தோற்றுவித்தது. உள்நாட்டுப் பக்கத்தில், எதிர்பார்க்கப்பட்டதனைவிட தாழ்ந்த வெளிநாட்டுச் செலாவணியின் வருவாய்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக்கான உயர்ந்த கேள்வி என்பன ரூபாவின் தேய்விற்குப் பங்களித்தன. இதன் விளைவாக, இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி 2018 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 9.7 சதவீதத்தினால் தேய்வடைந்தது. இந்நிலைமைகள் செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களின் நிகழ்வுகளின் மீது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கி தலையிடுவதை அவசியமாக்கியது. எனினும், மத்திய வங்கி செலாவணி வீதத்தில் கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையை அனுமதித்தமையானது செலாவணி வீதம், சந்தை அடிப்படைகளுடன் இசைந்து செல்லும் வீதத்தில் தேய்வடைவதற்கு அனுமதித்த வேளையில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை ஆரோக்கியமான மட்டமொன்றினைப் பேணியது. அரசாங்கமும் மத்திய வங்கியும் தங்கத்தின் இறக்குமதிகளின் மீது சுங்கக் கட்டுப்பாடுகளை விதித்தமையின் மூலமும் ஊர்திகள் மற்றும் குறிப்பிட்ட இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளின் மீதும் பல குறுங்கால வழிமுறைகளை ஏற்படுத்தியதன் மூலமும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேவையற்ற அழுத்தங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பல வழிமுறைகளைப் பின்பற்றின. இதேவேளை நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் உயர்வடைந்ததுடன் இது தீவிரமான பொறுப்பு முகாமைத்துவச் சட்டத்தினை அமுல்படுத்துவதனூடாக அரச படுகடன்களின் முன்கூட்டிய முகாமைத்துவத்தினை தேவைப்படுத்தியுள்ளது.*


## வணிகப்பொருட்களிலான வர்த்தகம் மற்றும் வர்த்தக நிலுவை

- **ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மற்றும் இறக்குமதிகளிலிருந்தான செலவினம் ஆகிய இரண்டும் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தன.** ஆண்டின் எட்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 5.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் இறக்குமதிகள் மீதான செலவினம் 10.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இதன்படி, 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2017இன் இதே காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 6,184 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 7,240 மில்லியனுக்கு விரிவடைந்தமைக்கு இறக்குமதி வளர்ச்சி ஏற்றுமதி வளர்ச்சியை விஞ்சியமையே காரணமாகும்.

- **2017 மார்ச்சிலிருந்து அவதானிக்கப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுகின்ற விதத்தில் வணிகப் பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தொடர்ச்சியாக அதிகரித்தன.** இதன்படி, 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 7,413 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 7,842 மில்லியனுக்கு 5.8 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வளர்ச்சிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவான திட்டம் (ஜிஎஸ்பி+) வசதி, பன்னாட்டுச் சந்தையில் அதிகரித்த பண்டங்களின் விலைகள், தூண்டுதலளிக்கும் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள் என்பன வலுவான நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் மத்திய வங்கியினால் பின்பற்றப்பட்ட நெகிழ்ச்சித்தன்மைமிக்க செலாவணி வீதக் கொள்கை பேணப்பட்டமை என்பனவற்றுடன் சேர்ந்து பக்கபலமாக விளங்கின. ஏற்றுமதிகளின் விரிவாக்கம், கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்து தோன்றிய வேளையில் வேளாண்மை மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகள் இக்காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.


- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 78 சதவீதத்திற்கு வகைகூறும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 9.4 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 6,085 மில்லியனுக்கு அதிகரித்தன.** இவ்வதிகரிப்பானது புடவைகள் மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், பெற்றோலிய உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, பொறி மற்றும் எந்திரத் துணைச் சாதனங்கள் என்பனவற்றிலிருந்தான வருவாய்களில் உயர்ந்த செயலாற்றம் பதிவுசெய்யப்பட்டமையின் மூலம் முக்கியமாகத் தூண்டப்பட்டது. 2017 மேயிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் - ஜிஎஸ்பி+ வசதி மீண்டும் கிடைக்கப்பெற்றமையின் உதவியுடன் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் புடவைகள் மற்றும் ஆடைகளிலிருந்தான ஏற்றுமதிப் பெறுகைகள் ஐ.அ.டொலர் 3,452 மில்லியனுக்கு 5.1 சதவீதத்தினால் அதிகரித்தன. இதற்கமைய ஆண்டின் எட்டு மாத காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,373 மில்லியனுக்கு 4.8 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஐக்கிய இராச்சியத்திலிருந்தான கேள்வி வீழ்ச்சியடைந்தமைக்கிடையிலும் ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளிலிருந்தான உயர்ந்த கேள்வியே காரணமாக அமைந்தது. அதேவேளை, பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இந்தியா, யப்பான், மெக்சிக்கோ மற்றும் இந்தோனேசியா போன்ற பாரம்பரியமற்ற சந்தைகளுக்கான ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் முறையே 4.7 சதவீதத்தினாலும் 1.8 சதவீதத்தினாலும் அதிகரித்தன. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இறப்பர் உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 584 மில்லியனுக்கு 8.6 சதவீதத்தினால் அதிகரித்து இறப்பர் டயர் ஏற்றுமதிகளின் மேம்பட்ட செயலாற்றத்தினைப் பிரதிபலித்தது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பெற்றோலிய உற்பத்திகளிலிருந்தான

வரைபடம் 5.1
வெளிநாட்டு வர்த்தகச் செயலாற்றம்




*மூலங்கள்:* இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.2
வெளிநாட்டுத்துறை: சென்மதி நிலுவை, பன்னாட்டு ஒதுக்குகள் மற்றும் செலாவணி வீதம்





5

ஏற்றுமதி வருவாய்கள் 53.5 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு உயர்ந்த ஏற்றுமதி அளவுகள் மற்றும் நீர்க்கல வானூர்தி எரிபொருட்களின் விலைகள் ஆகிய இரண்டினதும் தாக்கமே காரணமாகும். மேலும், ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 311 மில்லியனுக்கு 20.1 சதவீதத்தினால் உயர்வடைந்தமைக்கு தயாரிக்கப்பட்ட புகையிலை மற்றும் பழவர்க்கங்கள் மற்றும் காய்கறிகளின் தயாரிப்பு குறிப்பாக, தேங்காயுடன் தொடர்பான உற்பத்திகளின் மேம்பட்ட செயலாற்றமே காரணமாகும். 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் பொறி மற்றும் எந்திர சாதனங்களிலிருந்தான ஏற்றுமதிப் பெறுகைகள் 22.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இலத்திரனியல் சாதனங்களிலிருந்தான பெறுகைகளே முக்கிய காரணமாகும். மேலும், 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பொருட்கள், இரசாயன உற்பத்திகள் மற்றும் விலங்குத்தீன் என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் கைத்தொழில் ஏற்றுமதிகள் அதிகரிப்பதற்குப் பங்களித்தன. எனினும், போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான வருவாய்கள் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 91 மில்லியனுக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 34.0 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2017இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மூன்று கப்பல்கள் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதன் காரணமாக எழுந்த தளத் தாக்கமே முக்கிய காரணமாகும். மேலும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி, மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களும் ஆய்விற்குரிய காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.

5

- **மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 22 சதவீதத்திற்கு வகைகூறும் வேளாண்மை ஏற்றுமதிகள் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,723 மில்லியனுக்கு 5.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு கடல் உணவு மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை தவிர்ந்த பெரும்பாலும் அனைத்துத் துணை வகைகளிலும் காணப்பட்ட மோசமான செயலாற்றமே காரணமாகும்.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 970 மில்லியனுக்கு 3.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தாழ்ந்த சராசரி ஏற்றுமதி விலைகளினதும் தேயிலையின் ஏற்றுமதி அளவுகளினதும் இணைந்த தாக்கமே காரணமாகும். முதல் காலாண்டுப் பகுதியில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டமைக்கிடையிலும் ஒரு கி.கிறாம் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலை ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 5.27 இலிருந்து ஐ.அ.டொலர் 5.20 இற்கு வீழ்ச்சியடைந்தது. மோசமான உற்பத்திகளின் விளைவாக பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவும் 1.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ருசியா, துருக்கி, ஈராக் மற்றும் ஈரான் என்பன இலங்கையின் முக்கிய வாங்குநராக விளங்கி தேயிலை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏறத்தாழ 41 சதவீதத்திற்குப் பங்களித்தன. தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளுக்காக உயர்ந்த சராசரி ஏற்றுமதி விலைகள் பதிவுசெய்யப்பட்டிருந்த போதும் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 209 மில்லியனுக்கு 12.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு தேங்காய்த் துருவல், தேங்காய் எண்ணெய், உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிகள் என்பனவற்றின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். மோசமான வானிலை நிலைமைகளின் காலங்கடந்த தாக்கம் காரணமாக தெங்கின் குறைந்த உற்பத்தி அளவுகள் தெங்கு உள்ளீட்டு உற்பத்தியின் ஏற்றுமதி அளவுகளில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. கறுவா மற்றும் மிளகு ஏற்றுமதிகளிலிருந்து உயர்ந்த வருவாய்

**வரைபடம் 5.3**
**ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் (சன-ஓகத் 2018)**




*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

பெறப்பட்டமைக்கு மத்தியிலும் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 226 மில்லியனுக்கு 9.3 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு கராம்பு, சாதிக்காய் மற்றும் சாதிப்பத்திரியின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பே முக்கிய காரணமாக விளங்கியது. எனினும், இக்காலப்பகுதியில் கடலுணவு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.0 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 169 மில்லியனுக்கு உயர்வடைந்தமைக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன்பிடி உற்பத்திகளின் ஏற்றுமதி மீதான தடை அகற்றப்பட்டமை மற்றும் ஜிஎஸ்பி+ வசதி மீண்டும் கிடைக்கப்பெற்றமையிலும் இருந்து கிடைக்கப்பெற்ற நன்மைகளே காரணமாகும். இதன்படி, 2018இன் முதல் எட்டு காலப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியச் சந்தைகளுக்கான கடலுணவு ஏற்றுமதிகள் ஐ.அ.டொலர் 60 மில்லியனுக்கு 55.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு இத்தாலி, பிரான்ஸ், சேர்மனி மற்றும் நெதர்லாந்திலிருந்தான உயர்ந்த கேள்வியே காரணமாகும்.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2017இன் பதிவுசெய்யப்பட்ட 24.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 9.4 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 22 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.** இவ்வீழ்ச்சிக்கு கற்கள், இரும்புத்தாது, உலோகக் கழிவுகள் மற்றும் சாம்பல் என்பனவற்றின் ஏற்றுமதிகளில் காணப்பட்ட மோசமான செயலாற்றமே முக்கிய காரணமாக அமைந்தது.


- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இறக்குமதிகளின் மீதான செலவினம் தொடர்ந்தும் அதிகரித்தமைக்கு எரிபொருள், தனியாள் பயன்பாட்டிற்கான ஊர்திகள், புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும்**. இதன்படி, இறக்குமதி மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 15,083 மில்லியனுக்கு 10.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அதேவேளை, எரிபொருள் நீங்கலான இறக்குமதிச் செலவினம் இக்காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 12,314 மில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி இரண்டும் இறக்குமதிகள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்திலிருந்து தோன்றுகின்ற செலாவணி வீதத்தின் மீதான அழுத்தத்தினைத் தணிக்கும் நோக்குடன் பல கொள்கை வழிமுறைகளை அறிமுகப்படுத்தின.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் மொத்த இறக்குமதிகளில் அரைப்பங்கிற்கும் கூடுதலானளவிற்கு வகைகூறும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் இறக்குமதிச் செலவினத்தின் விரிவாக்கத்திற்கு பெருமளவிற்குப் பங்களித்தது**. ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் ஐ.அ.டொலர் 8,357 மில்லியனுக்கு 14.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு எரிபொருள் இறக்குமதிகள் மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினங்களே முக்கிய தூண்டுதலாக அமைந்தது. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் எரிபொருள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 2,769 மில்லியனுக்கு முன்னைய ஆண்டின் அளவிலிருந்து 28.6 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் மசகெண்ணெய் இரண்டினதும் உயர்ந்த இறக்குமதி அளவுகளும் உயர்ந்த விலைகளும் காரணமாகும். பன்னாட்டுச் சந்தையில் எண்ணெய் விலைகளின் அதிகரித்துச் செல்லும் போக்கினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை ஆய்விற்குரிய காலப்பகுதியில் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட பீப்பாய் ஒன்றிற்கான ஐ.அ.டொலர் 54.38 இலிருந்து பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 76.49 இற்கு 40.7 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளுக்கான உயர்ந்த கேள்வியுடன் இசைந்து செல்லும் விதத்தில் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்களின் மீதான செலவினம் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.3 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு துணிகள் மற்றும் நூலிழைகளின் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் பிளாத்திக்கு மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் மீதான செலவினம் 15.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அனைத்துத் துணை வகைகளின் மீதும் ஏற்பட்ட உயர்ந்த செலவினம் காரணமாக அமைந்த வேளையில் அடிப்படை உலோக இறக்குமதிகள் மீதான செலவினம் 17.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு உயர்ந்த இறக்குமதிகளே முக்கிய காரணமாகும். மேலும், இரசாயன உற்பத்திகள், வளமாக்கி இறக்குமதிகள் என்பன மீதான செலவினம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கு பங்களித்தன. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் மீதான இறக்குமதிச்

செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த தங்க இறக்குமதிகளே காரணமாகும். இலங்கைக்கான தங்க இறக்குமதிகள் மீது வரி விதிப்பு இல்லாமல் இருந்த வேளையில் இந்தியா 10 சதவீதமான சுங்கத் தீர்வையினைப் பேணியதன் காரணமாக இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் தங்கத்தின் மீது காணப்பட்ட தீர்வை வேறுபாடுகளினால் தோன்றிய சாத்தியமான சட்டத்திற்கு முரணான வணிகத்தினைப் பரிசீலனையில் கொண்டு, இலங்கை அரசாங்கம் 2018 ஏப்பிறலில் தங்க இறக்குமதிகள் மீது 15 சதவீத சுங்கத் தீர்வையினை விதித்தது. இதன் விளைவாக தங்கத்தின் மீதான இறக்குமதிச் செலவினம் 2018 மேயிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, இறப்பர் மற்றும் அதன் பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் ஆய்விற்குரிய காலப்பகுதியில் 9.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினத்தில் குறைப்பு காணப்பட்டமைக்கிடையிலும் நீண்ட கால நுகர்வுப்பொருட்கள் மீதான உயர்ந்த செலவினம் நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் அதிகரிப்பதற்கு வழிவகுத்தது**. ஒட்டுமொத்தமாக 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 2,950 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 3,441 மில்லியனுக்கு 16.7 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், உணவு மற்றும் குடிபானம் மீதான இறக்குமதிச் செலவினம் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,148 மில்லியனுக்கு 4.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு அரிசி இறக்குமதிகள் மீதான செலவினம் குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். 2017/2018 பெரும்போகத்திலும் 2018 சிறுபோகத்திலும் காணப்பட்ட அறுவடையின் மீட்சியினைத் தொடர்ந்து அரிசியின் அதிகரித்த உள்நாட்டு நிரம்பல் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட 446 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 241 மில்லியன் கி.கிறாம்களுக்கு வீழ்ச்சியடைய வழிவகுத்தது. அதேவேளை, 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் காய்கறிகள் மற்றும் கடலுணவு என்பன மீதான இறக்குமதிச் செலவினம் முன்னைய ஆண்டிலிருந்து முறையே 6.5 சதவீதத்தினாலும் 7.9 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. உணவுவல்லா நுகர்வுப்பொருட்களின் மீதான இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 2,293 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 31.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு சிறு எந்திர இயலளவினைக் கொண்ட ஊர்திகள், கலப்பு மற்றும் மின்னியல் ஊர்திகள் என்பனவற்றின் இறக்குமதியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பின் காரணமாக இரண்டு மடங்கிற்கும் கூடுதலான வளர்ச்சியைப் பதிவுசெய்த தனியாள் ஊர்திகளின் இறக்குமதிகளே முக்கிய காரணமாக விளங்கின. ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில் தனியாள் ஊர்திகளின் இறக்குமதிகள் 2018 வரவு செலவுத்திட்டத்தில் ஊர்திகளுக்கான திருத்தப்பட்ட வரி அமைப்பின் பெறுபேறாக ஐ.அ.டொலர் 1,092 மில்லியனுக்கு 116.3 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், அதிகரித்த இறக்குமதிகளிருந்து சென்மதி நிலுவையின் மீது ஏற்பட்ட அழுத்தங்களினைப் பரிசீலனையில் கொண்டு இலங்கை மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டும் அதிகரித்த ஊர்திகளின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பல புதிய வழிமுறைகளை மேற்கொண்டன. இதற்கமைய, 1,000 உருளை இயலளவிற்கும் குறைவான உந்து ஊர்திகள், கலப்பு மற்றும் மின்னியல் ஊர்திகள் என்பனவற்றின் இறக்குமதி மீது பிரயோகிக்கத்தக்க வரிகள் 2018 ஓகத்து 1இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் மேல்நோக்கித் திருத்தப்பட்டதுடன் 2018 செத்தெம்பர் 19ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வர்த்தகமல்லா ஊர்திகள் மீதான நாணயக் கடிதத்திற்கெதிராக 100 சதவீத எல்லை வைப்புத் தேவைப்பாடுகள் விரிவாக்கப்பட்டன. மேலும், வர்த்தகமல்லா ஊர்திகளின் இறக்குமதிகள் மீது

வரைபடம் 5.4
இறக்குமதிகளின் உள்ளடக்கம் (சன-ஓகத் 2018)




*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி தனியார் லிமிடட்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி


நாணயக் கடிதத்திற்கெதிராக எல்லை வைப்புத் தேவைப்பாடு 200 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் கலப்பு உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் 2018 ஒத்தோபர் 1 இலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 70 சதவீதத்தில் இருந்து 50 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. சலுகை ரீதியான ஊர்திக்கான அனுமதிப் பத்திரங்களும் மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்பட்டன. இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதியினை ஊக்கமிழக்கச் செய்வதற்காக குறிப்பிட்ட இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிக்கான நாணயக் கடிதம்/ ஏற்றுக்கொள்ளலின் ஆவணங்களுக்கெதிராக 100 சதவீத குறைந்தபட்ச காசுத் தேவைப்பாடு அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இப்பொருட்களுக்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்காக இலங்கை ரூபாவின் மாற்றலுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியை விடுவிப்பதற்குத் தடைசெய்யப்பட்டனர். அதேவேளை, இக்காலப்பகுதியில் மருத்துவ, மருந்தாக்கல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் சாதனங்கள் மீதான செலவினம் அதிகரித்தது.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் முதலீட்டுப்பொருட்களின் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 3,212 மில்லியனுக்கு 0.8 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் கட்டடப்பொருட்கள் மீது உறப்பட்ட தாழ்ந்த செலவினமே காரணமாகும்.** பொறிகள் மற்றும் கருவிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,703 மில்லியனுக்கு, ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், 2.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பொறியியல் கருவிகள், அச்சிடுகின்ற பொறிகள், மின்னியல் பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் மின்னியல் ஊர்திகள் மற்றும் மின்பிறப்பாக்கித் தொகுதிகள் என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்ட குறைப்புக்களே காரணமாகும். மேலும், கட்டடப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு மற்றும் அவற்றிலான பொருட்கள், சிமெந்து மற்றும் கனிப்பொருள் உற்பத்திகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பபே காரணமாகும். எனினும், போக்குவரத்துக் கருவிகள் மீதான இறக்குமதிச் செலவினம் 12.2 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வர்த்தக ரீதியான வாடகை ஊர்திகள், முச்சில்லு வண்டிகள், பேருந்துகள் மற்றும் நான்கு கப்பல்கள் போன்ற வர்த்தக ஊர்திகளின் உயர்ந்த இறக்குமதிகளே காரணமாகும்.

## வர்த்தக மாற்று விகிதம்

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வர்த்தக மாற்று விகிதம் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் சராசரியாக சிறிதளவால் தேய்வடைந்து ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இறக்குமதி விலைச் சுட்டெண்ணில் உயர்ந்த அதிகரிப்பு ஏற்பட்டமையைப் பிரதிபலிக்கிறது.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஒட்டுமொத்த ஏற்றுமதி விலைச் சுட்டெண் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.4 சதவீதத்தினால் 100.5 சுட்டெண் புள்ளிக்கு உயர்வடைந்தமைக்கு கைத்தொழில் ஏற்றுமதிகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான ஏற்றுமதி விலைச் சுட்டெண் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 6.4 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகளுடன் தொடர்பான விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட 27.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். மேலும், புடவைகள் மற்றும் ஆடைகள், இரசாயன உற்பத்திகள், மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் என்பனவற்றுடன் தொடர்பான விலைச் சுட்டெண்கள் இக்காலப்பகுதியில் அதிகரித்தன. வேளாண்மை ஏற்றுமதிகளுக்கான ஏற்றுமதி விலைச் சுட்டெண் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், 0.2 சதவீதத்தினால் சிறிதளவினால் வீழ்ச்சிடைந்தமைக்கு தேயிலை, சிறு

வரைபடம் 5.5
வர்த்தக மாற்றுவிகிதமும் வர்த்தக சுட்டெண்களும்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


5

வேளாண்மை உற்பத்திகள், வாசனைத்திரவியங்கள், காய்கறிகள் என்பனவற்றுடன் தொடர்பான விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். அதேவேளை வேளாண்மை ஏற்றுமதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தெங்கு மற்றும் கடலுணவின் ஏற்றுமதி விலைச் சுட்டெண்கள் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச்சுட்டெண் 5.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இடைநிலைப்பொருட்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட எரிபொருள், தாள் மற்றும் தாள் அட்டைகள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், இரசாயன உற்பத்திகள் மற்றும் கோதுமை மற்றும் சோளம் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். நுகர்வுப்பொருட்களுடன் தொடர்பான விலைச் சுட்டெண் சிறிதளவால் அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகள், ஆடைகள் மற்றும் துணைப்பொருட்கள், கடலுணவு, இறப்பர் உற்பத்திகள், எண்ணெய் மற்றும் கொழுப்பு என்பனவற்றின் உயர்ந்த விலைகள் ஆதரவாக விளங்கின. எனினும், 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் முதலீட்டுப்பொருட்களுக்கான இறக்குமதி விலைச்சுட்டெண் வீழ்ச்சியடைந்து பொறிகள் மற்றும் கருவிகள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள் என்பனவற்றின் குறைந்த விலைகளைப் பிரதிபலித்தன. இதன்படி, வர்த்தக மாற்று விகிதம் 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 104.5 சுட்டெண் புள்ளிகளிலிருந்து 0.6 சதவீதத்தினால் 103.9 சுட்டெண் புள்ளிகளுக்கு தேய்வடைந்தது. எனினும், எண்ணெய் தொடர்பான உற்பத்திகளை நீக்குவிடுமிடத்து வர்த்தக மாற்று விகிதம் ஆண்டின் முதல் எட்டு மாத காலப்பகுதியில், ஆண்டிற்கு ஆண்டு, அடிப்படையில் 2.3 சதவீதத்தினால் மேம்பட்டது.

### பணிகளிலுள்ள வர்த்தகம்

- **ஆண்டின் முதலரைப்பகுதியில் பணிகள் கணக்கில் காணப்பட்ட உயர்ந்த மிகையானது விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையை குறிப்பிட்டளவிற்கு நிதியிடுவதற்கு உதவியது.** 2018இன் முதலரைப்பகுதியில் பணிகள் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல் 2017இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,535 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 19.7 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 1,838 மில்லியனிற்கு அதிகரித்தது. பணிகள் கணக்கின் முக்கிய வளர்ச்சியின் தூண்டுநர்களாக சுற்றுலா வருவாய்கள் அதனைத் தொடர்ந்து போக்குவரத்துப் பணிகள்

வரைபடம் 5.6
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்





*மூலங்கள்:* இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச்சபை
இலங்கை மத்திய வங்கி

மற்றும் கணனிப் பணிகளிலிருந்தான வருவாய்கள் காணப்பட்டன. 2017இன் முதலரைப்பகுதியில் சுற்றுலா வருகைகளின் மிதமான வளர்ச்சி காணப்பட்டமையினால் 2018இன் முதலரைப்பகுதியில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்[1] தலைகீழாக மாற்றமடைந்து ஐ.அ.டொலர் 2,160 மில்லியனுக்கு ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 15.3 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளை, போக்குவரத்துத் துறையிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 9.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகங்களின் அதிகரித்த நடவடிக்கைகள் இக்காலப்பகுதியில் கொழும்புத் துறைமுகத்திலுள்ள மூன்று முனைக்கோடிகளில் கொள்கலன் கையாளலில் மற்றும் மாற்றிக் கப்பலேற்றலில் பதிவுசெய்யப்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சி போன்றவை முக்கியமாக உந்துதலாகவிருந்தன. 2018இன் முதலரைப்பகுதியில் கணனிப் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் 2017இன் முதலரைப்பகுதிக்கெதிராக போன்று 8.1 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

- **பொருளாதாரத்தின் முக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுநராக இலங்கை சுற்றுலாத் தொழில் துறை தொடர்ந்தும் விளங்கியது.** 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் 2.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1,731,922 வருகைகளுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரித்தன. 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில்

1 இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரச்சபை 2018இற்கான சராசரி தங்கியிருப்ப காலம் மற்றும் நாளொன்றிற்கான சராசரி செலவீடு என்பன தொடர்பில் அதனது அளவீட்டு பெறுபேறுகளை வெளியிட்டதன் பின்னர் இத்தற்காலிக மதிப்பீடுகள் திருத்தப்படக்கூடும்.

வரைபடம் 5.7
நாடுகளின்படி சுற்றுலாப் பயணிகளின் வருகை (சன-செத் 2018)




*மூலம்:* இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2017ஆம் ஆண்டின் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 2,878 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,212 மில்லியனாக விளங்கின. பணி வழங்கலில் காணப்பட்ட மேம்பட்ட தரம், இலக்கிடப்பட்ட சுற்றுலா ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் அதேபோன்று முன்னைய ஆண்டில் சுற்றுலா வருகைகளில் காணப்பட்ட தாழ்ந்த தளத் தாக்கம் என்பன 2018இல் சுற்றுலாக் கைத்தொழிலின் உயர்ந்த வளர்ச்சிக்குப் பங்களித்தன. மேற்கு ஐரோப்பா சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் முனைப்புப் பெற்றிருந்த வேளையில் அதனைத் தொடர்ந்து தென்னாசியாவும் கிழக்கு ஆசியாவும் முக்கிய இடத்தைப் பெற்றன. எனினும், கிழக்கு ஆசியாவிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் இக்காலப்பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 1.3 சதவீதத்தினால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு இந்தோனேசியாவிலிருந்தான குறைந்த வருகைகளே முக்கிய காரணமாகும். சுற்றுலாப் பயணிகளின் வருகைதரும் நாடுகளுக்கான நியதிகளில் இலங்கைக்கான மிகப்பெரும் சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட நாடான இந்தியாவிலிருந்தான வருகைகள் 301,784 இற்கு 12.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேளையில் இரண்டாவது மிகப்பெரிய சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட நாடான சீனாவிலிருந்தான வருகைகள் சிறிதளவு வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

- **2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் சுற்றுலாத் தொழில் துறை கணிசமானளவு முதலீடுகளைக் கவர்ந்து கொண்டது.** 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் அமைந்த ஒரே கூரையின் கீழான அலகு ஐ.அ.டொலர் 830 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட 100 புதிய சுற்றுலாச் செயற்றிட்டங்களுக்கான முதலீட்டு முன்மொழிவுகளைப் பெற்றுக் கொண்டது. இச்செயற்றிட்டங்கள் நிறைவடையும் பொழுது 3,182 அறைகள் மேலதிகமாகச் சேர்க்கப்படும். இதுவரை பெறப்பட்ட முன்மொழிவுகளிலிருந்து 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 104 மில்லியன் மொத்தப் பெறுமதியினைக் கொண்ட 1,016 அறைகளுடன் கூடிய 29 சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்களுக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. மேலும், இக்காலப்பகுதியில் 24 சுற்றுலாவிடுதிச் செயற்றிட்டங்கள் 878 மேலதிக அறைகளுடன் தொழிற்படத் தொடங்கின.

## முதலாந்தர வருமானம்

- **2018இன் முதலரைப்பகுதியில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையானது அரசாங்கத்தின் வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் உயர்ந்த பங்கிலாபம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளினால் பெறப்பட்ட மீள்முதலீட்டு வருவாய்கள் என்பனவற்றின் காரணமாக விரிவடைந்தது.** இதன்படி, 2018இன் முதலரைப்பகுதியில் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2017இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 997 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,139 மில்லியனுக்கு விரிவடைந்தது. 2018இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் அதிகரிப்பின் காரணமாக மீள்முதலீட்டு வருவாய்கள் 2017இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 105 மில்லியனிலிருந்து 2018இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 114 மில்லியனுக்கு அதிகரித்தன. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான பங்கிலாபக் கொடுப்பனவுகளும் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 218 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 265 மில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், 2018இன் முதலரைப்பகுதியில் படுகடன் பிணையங்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் முறையே ஐ.அ.டொலர் 462 மில்லியனுக்கும் ஐ.அ.டொலர் 327 மில்லியனுக்கும் அதிகரித்தன. இவ்வதிகரிப்பிற்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் புதிய வழங்கல்களின் பேரிலான கூப்பன் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளும் 2017இல்

அரசாங்கத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன. 2018இன் முதலரைப்பகுதியில் அரசாங்கத்தினாலும் தனியார் துறையினாலும் மேற்கொள்ளப்பட்ட கடன்பாடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளும் உலகளாவிய வட்டி வீதங்களின் படிப்படியான அதிகரிப்பினால் பாதிக்கப்பட்டன.

### இரண்டாந்தர வருமானம்

- **2018இன் முதலரைப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட படிப்படியான மீளெழுச்சியின் காரணமாக இரண்டாந்தர வருமானக் கணக்குகளின் காணப்பட்ட மிகை மிதமானளவு அதிகரித்தது.** 2018இன் முதலரைப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 3,591 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 3,624 மில்லியனுக்கு 0.9 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரித்து முன்னைய ஆண்டில் அவதானிக்கப்பட்ட சுருக்கத்திலிருந்து மீளுவதற்கான அறிகுறிகளைக் காட்டியது. எனினும், 2018இன் முதல் எட்டு மாத காலப்பகுதியின் இறுதியில் ஒன்றுசேர்ந்த அடிப்படையில் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018 யூலை மற்றும் ஓகத்தில் பதிவுசெய்யப்பட்ட மிதமான உட்பாய்ச்சல்களுடன் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 4,777 மில்லியனுக்கு 0.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும் கூட நடுத்தர காலப்பகுதியில் மத்திய கிழக்கு உட்பட உலகளாவிய பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுவரும் படிப்படியான மீட்சியுடன் தொழிலாளர் பணவனுப்பல்களில் மீளெழுச்சியொன்று எதிர்பார்க்கப்படுகிறது. பன்னாட்டு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மத்திய கிழக்குப் பொருளாதாரங்களின் உறுதிப்பாட்டிற்குப் பங்களிக்குமென்பதனால் இது தொழிலாளர் பணவனுப்பல்கள் படிப்படியாக அதிகரிப்பதற்கு உதவும்.

### நடைமுறைக் கணக்கு மீதி

- **2018இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு விரிவடைந்தது.** 2018இன் முதலரைப்பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2017இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1,037 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,813 மில்லியனுக்கு விரிவடைந்தமைக்கு வர்த்தகம் மற்றும் முதலாந்தர வருமானக் கணக்குகளின் பற்றாக்குறையினது குறிப்பிடத்தக்க விரிவாக்கமே முக்கிய காரணமாகும். 2018இன் முதலரைப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தமைக்கு ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்புக் காணப்பட்டமைக்கிடையிலும் எரிபொருள், தனியாள் ஊர்திகள் மற்றும் தங்க இறக்குமதிகளின் தூண்டுதலினால் ஏற்பட்ட உயர்ந்த இறக்குமதிச் செலவினமே காரணமாகும். வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கம்பனிகளின் அதிகரித்த மீள்முதலீட்டு வருவாய்கள் மற்றும் பங்கிலாபக் கொடுப்பனவுகள், அரசாங்கத்தின் வட்டிக் கொடுப்பனவுகள் என்பனவற்றின் காரணமாக முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை தொடர்ந்தும் விரிவடைந்தது. எனினும், பணிகளின் ஏற்றுமதிகளில் முக்கியமாக சுற்றுலா வருவாய்களிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, இரண்டாந்தர வருமானக் கணக்கில் காணப்பட்ட மிகை என்பன நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை ஓரளவிற்கு குறைப்பதற்கு உதவின.

### மூலதனக் கணக்கு மீதி


- **2018இன் முதலரைப்பகுதியில் மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் மிதமானவையாவே காணப்பட்டன.** தேறிய அடிப்படையில் ஆண்டின் முதலரைப்பகுதியில் மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 2017இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 12 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 9 மில்லியனுக்கு சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்து மூலதனக் கொடைப் பெறுகைகளின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைப் பிரதிபலித்தது.

### நிதியியல் கணக்கு

- **2018இன் முதலரைப்பகுதியில் பங்குரிமை மூலதன மற்றும் முறிச் சந்தைகளில் இருந்தான சில வெளிப்பாய்ச்சல்களுடன் நிதியியல் கணக்கு குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்திருக்கிறது.** நிதியியல் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான இரண்டு பன்னாட்டு முறிகளிலிருந்தான பெறுகைகள் என்பனவற்றின் காரணமாக பெருமளவிற்கு அதிகரித்தன. 2018 ஏப்பிறலில் இலங்கை ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 1.25 பில்லியன் பெறுமதியினைக் கொண்ட இரண்டு புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்கியது. இது 2018இன் முதலரைப்பகுதியின் நிதியியல் கணக்கிற்கான முக்கிய உட்பாய்ச்சல்களை உள்ளடக்கியிருந்தது. இலங்கை 2018இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உட்பட

5

வரைபடம் 5.8
சென்மதி நிலுவைகள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

ஐ.அ.டொலர் 1,353 மில்லியன் தொகை கொண்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களையும் பெற்றுக்கொண்டது. பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐ.அ.டொலர் 252 மில்லியன் கொண்ட ஐந்தாவது தொகுதியின் பெறுகை, தனியார் துறையினாலும் அரசிற்குச் சொந்தமான வியாபார முயற்சிகளினாலும் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 345 மில்லியன் கொண்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் ஐ.அ.டொலர் 199 மில்லியன் கொண்ட தனியார் துறையால் பெறப்பட்ட தேறிய வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் என்பன 2018இன் முதலரைப்பகுதியில் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்களாகக் காணப்பட்டன.

- **முதலீட்டுச் சபைக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகளை உள்ளடக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2018இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.** இதன்படி 2018இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 567 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,353 மில்லியனாக விளங்கின. 2018இன் முதலரைப்பகுதியில் முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 365 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,071 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. 2018இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள் அம்பாந்தோட்டை இன்ரநஷனல் போர்ட் குறூப் (பிறைவேற்) லிமிடெட்டினால் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 682 மில்லியன் கொண்ட தொகையை உள்ளடக்கியிருந்தன. துறைவாரியான அடிப்படையில் முக்கிய உட்பாய்ச்சல்கள், துறைமுகங்கள், தொலைத்தொடர்பூட்டல்கள், வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி மற்றும் சுற்றுலாத் துறைகளுக்கு வழிப்படுத்தப்பட்டன. மேலும், தயாரிப்புத் துறை இக்காலப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் மிதமான தொகையொன்றைப் பெற்றுக் கொண்டது. உடனடி முதலீட்டாளர் நாடுகளின் அடிப்படையில் சீனா, இந்தியா, ஹொங்கொங், மலேசியா மற்றும் சுவீடன் என்பன 2018இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் முதல் ஐந்து முக்கிய நாடுகளாக விளங்கின.

- **2018இன் முதலரைப்பகுதியில் வெளிநாட்டுக் கடன்கள் 2017இன் முதல் ஆறு மாதங்களில் காணப்பட்ட தேறிய உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.** 2018இன் முதலரைப்பகுதியில் நீண்ட காலக் கடன்களின் பேரில் அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல்கள் 2017இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 1,139 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 785 மில்லியனாக விளங்கியது. 2017இன் முதலரைப்பகுதியில் கணிசமான உயர்ந்த உட்பாய்ச்சலொன்று பதிவுசெய்யப்பட்டமைக்கு ஐ.அ.டொலர் 450 மில்லியன் கொண்ட கூட்டுக்கடன் வசதியின் பெறுகைகளே காரணமாகும். எனினும், 2018இன் முதல் ஆறு மாதங்களின் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் 2017இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 617 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,039 மில்லியனாக விளங்கின. 2018இல் காணப்பட்ட இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு 2016 மற்றும் 2017இல் பெறப்பட்ட வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதிகளின் ஐ.அ.டொலர் 473 மில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவே காரணமாக இருக்கமுடியும். இதன் விளைவாக, 2018இன் முதலரைப்பகுதியில் அரசாங்கத்திற்கான வெளிநாட்டுக் கடன்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியின் ஐ.அ.டொலர் 522 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 254 மில்லியன் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது.

5

5

- **2018இன் முதலரைப்பகுதியில் அரச திறைசேரி உண்டியல் மற்றும் முறிச் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைக் காட்டின.** 2018இன் முதலரைப்பகுதியில் அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் சந்தைக்கான வெளிநாட்டு முதலீடுகள் 2018இன் முதலரைப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தைக்கான (நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தவிர்ந்த) வெளிநாட்டு முதலீடுகள் 2017இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 153 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 176 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தது. மேலும், 2017இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட முறிகளுடன் ஒப்பிடுகையில் 2018இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் பெறுமதி கொண்ட இரண்டு நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை அரசாங்கம் வழங்கியது.

- **2018இன் முதலரைப்பகுதியில் பங்குரிமை மூலதன வடிவிலான சொத்துப்பட்டியல் முதலீடுகள் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.** கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட கம்பனிகளினால் முக்கியமாகப் பெறப்பட்ட பங்குரிமை மூலதன முதலீடுகள் 2018இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 135 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. இது இரண்டாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 74 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலினதும் முதலாந்தரச் சந்தைக்கான ஐ.அ.டொலர் 61 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சலினதும் தேறிய விளைவாகும். மேலும், சொத்துப்பட்டியல் மற்றும் நேரடி முதலீடுகள் இரண்டையும் உள்ளடக்கிய கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு மூலதனப்பாய்ச்சலின் பின்னணியில் சொத்துப்பட்டியல் முதலீடுகளின் தேறிய உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 135 மில்லியனாக விளங்கிய வேளையில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் ஐ.அ.டொலர் 82 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்து ஐ.அ.டொலர் 53 மில்லியன் கொண்ட மொத்தத் தேறிய உட்பாய்ச்சலைத் தோற்றுவித்தது.

- **வங்கித்தொழில் துறைக்கான வெளிநாட்டுக் கடன்கள் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்த வேளையில் 2018இன் முதலரைப்பகுதியில் தனியார் துறைக்கான வெளிநாட்டுக் கடன்கள் தேறிய உட்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தன.** 2018இன் முதலரைப்பகுதியில் வங்கித்தொழில் துறைக்கான வெளிநாட்டுக் கடன்கள் 2017இன் முதலரைப்பகுதியின் ஐ.அ.டொலர் 626 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க தேறிய உட்பாய்ச்சலுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 204 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. அதேவேளை, 2018இன் முதலரைப்பகுதியில், தனியார் துறை மற்றும் அரச துறைக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் ஐ.அ.டொலர் 199 மில்லியன் கொண்ட தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஆய்விற்குரிய காலப்பகுதியில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்பாடுகள் எதுவும் காணப்படாத வேளையில் தனியார் துறை ஐ.அ.டொலர் 280 மில்லியன் கொண்ட கடன் உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. மீள்கொடுப்பனவு நியதிகளில், 2018இன் முதலரைப்பகுதியில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும் தனியார் துறைக் கூட்டுத்தாபனங்களும் முறையே ஐ.அ.டொலர் 68 மில்லியன் மற்றும் 13 மில்லியன் கொண்ட மீள்கொடுப்பனவுகளைப் பதிவுசெய்தன.

- **ஒட்டுமொத்தமான நிதியியல் கணக்குகள் 2018இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்க அரச கடன்பாடுகள் மற்றும் அம்பாந்தோட்டை விற்பனைப் பெறுகைகளிலிருந்தான நேரடி முதலீடுகள் என்பனவற்றினால் உதவியளிக்கப்பட்டது.** விரிவடைந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை, அரச வெளிநாட்டு படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் வரவு செலவுத்திட்ட நிதியிடல் என்பனவற்றினால் உருவாக்கப்பட்ட நிதியிடல் தேவைப்பாடு பன்னாட்டு மூலங்களிலிருந்து தொடர்ந்து கடன்பாடுகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்தினை அவசியப்படுத்தியது. உலகளாவிய திரவத்தன்மை நிலைமைகள் இறுக்கமடைந்ததொரு பின்னணியில் ஆண்டின் முதலரைப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் படிப்படியாகப் புறக்கீடு செய்யப்பட்டமை வெளிநாட்டிலிருந்து தொடர்ந்தும் கடன்படுவதற்கான தேவைப்பாடு மேலும் தீவிரமடைந்தது.

### பன்னாட்டு முதலீட்டு நிலைமை


- **2018 யூன் இறுதியில் வதிவற்றோருடனான இலங்கையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை பன்னாட்டு முதலீட்டு நிலைமையில் பிரதிபலிக்கப்பட்டவாறு 2017 இறுதியின் சொத்து நிலைமையுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தது.**

வெளிநாட்டுச் சொத்துக்களின் இருப்பு நிலைமை மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய விளைவாக அதிகரித்தது. 2017 திசெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 7,959 மில்லியனாக விளங்கிய ஒதுக்குச் சொத்து நிலைமை 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 9,267 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு நாட்டிற்கான இரண்டு பன்னாட்டு முறிகளின் வழங்கல்களிலிருந்து கிடைத்த பெறுகைகள், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் கையளிப்பிலிருந்தான பெறுகைகள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட் நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதி கிடைத்தமை என்பனவே காரணமாகும். இலங்கை ஏற்றுமதியாளர்களினாலும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களினாலும் வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன்கள் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற சொத்து நிலைமை 2017இன் இறுதியில் காணப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடுகையில் 2018 யூன் இறுதியில் சிறிதளவால் அதிகரித்தது. அதேவேளை, 2018 யூன் இறுதியில் நேரடி முதலீடுகளின் சொத்து நிலைமையும் சிறிதளவால் அதிகரித்தது.

- **2018 யூன் இறுதியில் பன்னாட்டு முதலீட்டு நிலைமையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு வதிவற்றோருக்கான இலங்கையின் மொத்தப் பொறுப்பு நிலைமை ஆண்டின் தொடக்கத்திலிருந்து ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.1 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது.** மொத்த பொறுப்பு நிலைமை 2017 திசெம்பர் இறுதியிலுள்ளவாறு ஐ.அ.டொலர் 60,721 மில்லியனிலிருந்து 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 62,831 மில்லியனுக்கு அதிகரித்தது. இக்குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு ஆண்டின் தொடக்கத்துடன் ஒப்பிடுகையில் வெளிநின்ற அரச படுகடன் பிணையங்களில் ஏற்பட்ட உயர்வும் மொத்த நேரடி முதலீடுகளின் இருப்பு நிலைமையில் காணப்பட்ட விரிவும் முக்கிய காரணங்களாக அமைந்தன. 2018 ஏப்பிறலில் ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் தொகை கொண்ட இரண்டு புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலைத் தொடர்ந்து 2018 யூன் இறுதியில் அரசாங்கப் படுகடன் பிணையங்களின் வெளிநின்ற பொறுப்பு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. மேலும், வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற சொத்துப்பட்டியல் முதலீட்டு பொறுப்பு நிலைமை 2018 ஏப்பிறலில் இலங்கை வங்கியின் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட பன்னாட்டு முறியொன்று முதிர்ச்சியடைந்ததுடன் குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவடைந்தது. முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் அதிகரித்த உட்பாய்ச்சல்கள் மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் கையளிப்பிலிருந்தான பெறுகைகள் என்பனவற்றின் காரணமாக 2018 யூன் இறுதியில் மொத்த நேரடி முதலீட்டு பொறுப்பு நிலைமையும் ஐ.அ.டொலர் 12,637 மில்லியனுக்கு அதிகரித்தது. பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் மிகப்பெரும் பொறுப்புக்கூறினை உள்ளடக்கியிருக்கும் அரச கடன்களின் வெளிநின்ற பொறுப்பு நிலைமை 2017 திசெம்பர் இறுதியின் ஐ.அ.டொலர் 19,201 மில்லியனிலிருந்து 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 18,913 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு தேறிய கடன் வெளிப்பாய்ச்சல்களே காரணமாகும். மேலும், 2018இன் முதலரைப்பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றுடன் தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன்களின் பொறுப்பில் அதிகரிப்பொன்று காணப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதியின் பெறுகையுடன் 2018 யூன் இறுதியில் மத்திய வங்கியின் வெளிநின்ற கடன் பொறுப்பு நிலைமையும் அதிகரித்தது. அதேவேளை, நாணய மற்றும் வைப்பு நியதிகளில் வங்கிகளின் பொறுப்பு நிலைமை குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்த வேளையில் 2018இன் முதலரைப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுக் கடன்களினது வெளிநின்ற பொறுப்பு நிலைமை மிதமாகக் குறைவடைந்தது.

- **இலங்கையின் வெளிநாட்டு மொத்தச் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு நிலைமைகளுக்கிடையேயான வேறுபாடாக பரிசீலனையில் கொள்ளப்படுகின்ற இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமையானது 2018 யூன் இறுதியில் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது**. 2018இன் முதலரைப்பகுதியில் ஒதுக்குச் சொத்துக்களில் உறுதியான அதிகரிப்பொன்று காணப்பட்டமைக்கிடையிலும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வடிவில் அதிகரித்த அரசின் கடன்பாடுகள், நேரடி முதலீட்டு நிலைமையில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஏனைய படுகடன் உட்பாய்ச்சல்கள் மொத்தத் தேறிய பன்னாட்டு நிலைமையினை 2017 திசெம்பர் இறுதியின் ஐ.அ.டொலர் 48.4 பில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமையிலிருந்து 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 49.5 பில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமையொன்றிற்கு உயர்த்தியது. இலங்கையின் தேறிய பொறுப்பு நிலைமையில் ஏற்பட்ட இப்படிப்படியான அதிகரிப்பிற்கு குறிப்பாக கடந்த ஒரு சில ஆண்டுகளில் அரச படுகடன் ஒன்றுசேர்ந்தமையே தூண்டுதலாக அமைந்தது.

வரைபடம் 5.9
மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் இறக்குமதி மாதங்களும்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டுப் படுகடன் நிலைமை

- **2018இன் முதலரைப்பகுதியில் இலங்கையின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் தொடர்ந்தும் உயர்வடைந்தது.** நாட்டின் வெளிநின்ற படுகடன் இருப்பு 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 51.8 பில்லியனிலிருந்து 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 53.5 பில்லியனுக்கு அதிகரித்தது. படுகடன் இருப்பில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்கு முக்கியமாக அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தூண்டுதலாக அமைந்ததுடன், இது, இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்கு வகைகூறியது. அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2017 இறுதியின் ஐ.அ.டொலர் 31.4 பில்லியனிலிருந்து 2018 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 32.6 பில்லியனுக்கு அதிகரித்தமைக்கு வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்களின் இருப்பில் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டமைக்கிடையிலும் ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் தொகை கொண்ட இரண்டு புதிய நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலே முக்கிய காரணமாகும். மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதி பெறப்பட்டமையுடன் சிறிதளவால் அதிகரித்தது. ஆண்டின் முதலரைப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு இலங்கை வங்கியினால் திரட்டப்பட்ட பன்னாட்டு முறியொன்றின் முதிர்ச்சி மற்றும் குறைவடைந்த நாணயம், வைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் என்பனவற்றின் காரணமாக குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், 2018இன் முதலரைப்பகுதியில் தனியார் துறை மற்றும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு, இலங்கை இறக்குமதியாளர்களினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களில் ஏற்பட்ட உயர்வு அதேபோன்று தனியார் துறையின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக அதிகரித்தது. இக்காலப்பகுதியில் முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான அதிகரித்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சலுடன் 2018இன் முதலரைப்பகுதியில் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் தொடர்பான தரப்பினரின் வெளிநின்ற படுகடனும் அதிகரித்தது.

## ஒதுக்குச் சொத்து நிலைமை

- **நிதியியல் கணக்கிற்கு ஏற்பட்ட உயர்ந்த உட்பாய்ச்சல்களைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2018 ஏப்பிறல் இறுதியில் ஐ.அ.டொலர் 9.9 பில்லியன் கொண்ட வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2018 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 7.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** ஒதுக்குகள் ஒன்றுதிரண்டமைக்கு ஐ.அ.டொலர் 2.5 பில்லியன் தொகை கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல்களினது உட்பாய்ச்சல்களும் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் கையளிப்பிலிருந்து பெறப்பட்ட ஐ.அ.டொலர் 682 மில்லியன் கொண்ட பெறுகைகளும் ஐ.அ.டொலர் 252 மில்லியன் கொண்ட பன்னாட்டு நாணய நிதியம் - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதியின் பெறுகைகளும் பக்கபலமாக அமைந்தன. எனினும், வட்டி மற்றும் மூலதன மீள்கொடுப்பனவுகள் உள்ளிட்ட வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன் மீள்கொடுப்பனவுகளின் நியதிகளிலான முக்கிய வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வட்டிக் கொடுப்பனவுகள், வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதிகளின் மூலதன மீள்கொடுப்பனவுகள், தேறிய ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய கொடுப்பனவுகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணியின் வழங்கல் என்பன 2018 செத்தெம்பர் இறுதியில் ஒதுக்கு நிலைமை வீழ்ச்சியடைவதற்கு வழிவகுத்தன. இதன் விளைவாக, 2018 செத்தெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் இறக்குமதிகளின் 3.8 மாத இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்பட்டது. மேலும், மொத்த ஒதுக்குச் சொத்து நிலைமை 2018 செத்தெம்பர் இறுதியில் நாட்டின் குறுங்காலப் படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 54 சதவீதத்தை உள்ளடக்கியிருந்தது.

5

- **மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த பன்னாட்டு ஒதுக்குகள் 2017 திசெம்பர் இறுதியின் ஐ.அ.டொலர் 10.4 பில்லியனிலிருந்து 2018 ஓகத்து இறுதியில் ஐ.அ.டொலர் 11.0 பில்லியனுக்கு அதிகரித்தது.** இவ்வதிகரிப்பானது மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 626 மில்லியனால் அதிகரித்தமையினதும் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களின் உடமைகள் ஐ.அ.டொலர் 82 மில்லியனால் வீழ்ச்சியடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். 2018 ஓகத்து இறுதியில், மொத்த பன்னாட்டு ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கம் 5.9 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாக இருந்தது.

### திரண்ட நிலுவை

- **2018இன் செத்தெம்பர் நடுப்பகுதி வரை மிகையினைப் பதிவுசெய்த திரண்ட நிலுவையானது 2018 செத்தெம்பர் இறுதியில் பற்றாக்குறையொன்றிக்கு மாறியது**. படுகடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைக்கான மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணியின் வழங்கல் என்பனவற்றின் முக்கிய காரணமாக ஒதுக்குநிலைமையில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் திரண்ட நிலுவையானது 2017இன் தொடர்பான காலப்பகுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 2,027 மில்லியன் மிகையுடன் ஒப்பிடுகையில் 2018 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 650 மில்லியன் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.


### செலாவணி வீத அசைவுகள்

- **2018இன் முதல் நான்கு மாத காலப்பகுதியில் ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகக் காணப்பட்ட செலாவணி வீதம் அதன் பின்னர் குறிப்பிடத்தக்க அழுத்தங்களுக்கு உள்ளானது**. முதல் நான்கு மாத காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக்குள் மிகப் பெருமளவில் உட்பாய்ச்சப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி இலங்கை மத்திய வங்கி தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 459 மில்லியன் தொகை கொண்ட வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்த்துக் கொள்வதற்கு இயலுமைப்படுத்தியது. எனினும், இச்சாதகமான நிலைமையானது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் காரணிகள் இரண்டினதும் விளைவாக 2018 மேயிலிருந்து மாற்றமடைந்தது. வெளிநாட்டுப் பக்கத்தில் வலுவடைந்த ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம், பெடரல் றிசேர்வ் வங்கியின் வட்டி வீதங்களில் அதிகரிப்பொன்றினைத் தூண்டி, 2018 மற்றும் 2019இற்கான உயர்ந்த எண்ணிக்கையிலான சாத்தியமான வட்டி வீத உயர்வுகள் அதிகளவில் அறிவிக்கப்பட்டமையுடன் சேர்ந்து கொண்டது. இவ்வபிவிருத்திகள் தோற்றம்பெற்று வரும் பொருளாதாரங்களின் மூலதனச் சந்தைகளிலிருந்து வெளிநாட்டு முதலீடுகள் வெளிச்செல்வதனைத் தோற்றுவித்தது. இத்தாக்கம் இலங்கையிலும் உணரப்பட்டதுடன் அரச பிணையங்கள் சந்தையிலிருந்தும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்தும் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ச்சியாக வெளியேறியமை, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தாழ்ந்த திரவத்தன்மை மட்டங்களைத் தோற்றுவித்தது. உள்நாட்டுப் பக்கத்தில், எதிர்பார்க்கப்பட்டதனைவிடத் தாழ்ந்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிக்கான உயர்ந்த கேள்வி என்பன ரூபாவின் பெறுமானம் தேய்வடைவதற்குப் பங்களித்தன. இந்நிலைமைகள் இலங்கை ரூபாவின் நியாயமற்ற தேய்வினைத் தணிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை வழங்கல் செய்வதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீட்டினை அவசியமாக்கியது. எனினும், மத்திய வங்கி செலாவணி வீதத்தில் கூடியளவு நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்து செலாவணி வீதம் சந்தை அடிப்படைகளுக்கு நிகரான விதத்தில் தேய்வடைவதற்கு அனுமதித்த வேளையில் மிகையான செலாவணி வீதத் தளம்பல்களைத் தணிப்பதற்கு மாத்திரம் திரவத்தன்மையினை வழங்கியதன் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. இது, 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் தேறிய அடிப்படையில் மத்திய வங்கி ஐ.அ.டொலர் 185 மில்லியனை வழங்கல் செய்வதற்கு வழிவகுத்ததுடன் இக்காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா 9.7 சதவீதத்தினால் தேய்வடைந்தது. 2018 செத்தெம்பர் இறுதியில் குறுக்கு நாணய செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா ஸ்ரேலிங் பவுண் (7.1 சதவீதம்), யப்பானிய யென் (9.0 சதவீதம்), யூரோ (7.4 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராகத் தேய்வடைந்த வேளையில் இந்திய ரூபாவிற்கெதிராக (2.3 சதவீதம்) உயர்வடைந்தது.

- **ஐக்கிய அமெரிக்காவின் வட்டி வீத உயர்வுகளுக்கு நிகரான விதத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் பரந்த அடிப்படையில் வலுவடைந்தமையானது ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக மற்றைய முக்கிய நாணயங்களில் தேய்வினை விளைவித்தது**. இதன்படி,


5

வரைபடம் 5.10
உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணி சந்தையில் மத்திய வங்கியின் தலையீடு மற்றும் செலாவணி வீதம்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.11
தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள்: 24 - நாணயம் (2010=100)




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2018 செத்தெம்பர் இறுதியில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இந்திய ரூபா (11.7 சதவீதம்), யப்பானிய யென் (0.8 சதவீதம்), ஸ்ரேலிங் பவுண் (2.7 சதவீதம்), யூரோ (2.5 சதவீதம்) என்பன தேய்வடைந்தன.

- **5-நாணயம் மற்றும் 24-நாணயம் இரண்டினதும் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் என்பனவற்றின் சுட்டெண்கள் 2018இன் ஒன்பது மாதப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.** இலங்கையின் மிக முக்கிய வர்த்தகப் பங்காளர்களில் பெரும்பான்மை நாணயங்கள் தொடர்பில் இலங்கை ரூபாவின் பெறுமதியினை அளவிடுகின்ற பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்து குறுக்கு நாணய செலாவணி வீதங்களுடன் சேர்ந்து சில முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா பெயரளவு நியதிகளில் தேய்வடைந்தமையினைப் பிரதிபலிக்கிறது. இதற்கமைய, 5-நாணய மற்றும் 24-நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 2018 செத்தெம்பர் வரையான இவ்வாண்டுக் காலப்பகுதியில் முறையே 5.46 சதவீதத்தினாலும் 4.93 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, பெயரளவு செலாவணி வீதங்களின் வேறுபாடுகளுக்குப் புறம்பாக நாடுகளுக்கிடையேயான பணவீக்க வேறுபாடுகளைப் பரிசீலனையில் கொள்கின்ற இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையை எடுத்துக்காட்டும் 5-நாணய மற்றும் 24-நாணய உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் முறையே 4.43 சதவீதத்தினாலும் 4.88 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் 100 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட ஆரம்ப மட்டத்திற்குச் சிறிதளவு கீழே காணப்பட்டு, தள ஆண்டு 2010இல் நிலவிய வீதங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையின் மேம்பாடொன்றினை எடுத்துக்காட்டின.

- **2018இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதியில் உள்நாட்டின் வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் உடன் மற்றும் முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்கள் வீழ்ச்சியடைந்தன.** 2017இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 6,193 மில்லியனாக அமைந்த உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2018இன் தொடர்பான காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 3,964 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவும் 2017இன் தொடர்பான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 6,557 மில்லியனிலிருந்து 2018இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 4,978 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2018 செத்தெம்பர் இறுதியில் ஒரு மாதம் முன்னோக்கிய மிகையானது சராசரி வட்டி வீத வேறுபாட்டு மட்டத்திற்கு மேல் தொடர்ச்சியாகக் காணப்பட்ட அதேவேளை, வர்த்தக வங்கிகளின் சராசரி தேறிய ஆரம்ப நிலை நேர்க்கணிய மட்டத்தில் காணப்பட்டது. 2018இன் முதல் மூன்று காலாண்டுப்பகுதியில் முன்னோக்கிய மிகை மற்றும் தேறிய ஆரம்ப நிலை என்பனவற்றின் அசைவுகள் செலாவணி வீதம் அண்மைய காலத்தில் மேலும் தேய்வடையுமென்ற வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைப் பங்கேற்பாளர்களின் எதிர்பார்ப்புக்களைப் பிரதிபலித்தது.

### எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகள்

- **குறிப்பாக, விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையுடன் வெளிநாட்டுத் துறையினால் எதிர்நோக்கப்படும் சவால்கள் 2018இல் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கில் பாதிப்புக்குள்ளாக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற போதும் வர்த்தகப் பற்றாக்குறையின் விரிவினைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற வழிமுறைகள் கூடுதலான போட்டித்தன்மை கொண்ட செலாவணி வீதங்களுடன் சேர்ந்து 2019இல் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் மீது சாதகமான தாக்கமொன்றினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது**. இறக்குமதிகளை ஊக்கமிழக்கச் செய்வதற்காக அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் அறிமுகப்படுத்தப்பட்ட வழிமுறைகளைத் தொடர்ந்து, இறக்குமதிகளில் எதிர்பார்க்கப்படும் வீழ்ச்சியுடன் ஆண்டின் பிற்பகுதியில் வர்த்தகக் கணக்கின் விரிவடைந்த தன்மை குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, ஏற்றுமதிகள் படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சி உத்வேகம் 2019இல் விரைவடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதற்கு புதிய பங்காளர்களுடனான வர்த்தக உறவுகளை நிறுவியமை, தூண்டுதல் மிக்க வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், வலுவான நிறுவன ரீதியான ஆதரவு மற்றும் கூடுதலான போட்டித்தன்மை வாய்ந்த செலாவணி வீதம் என்பன உதவியாக அமையும். உயர் தீர்வைகளுக்குட்பட்டிருக்கும் பெரும்பாலான உற்பத்திகள் இலங்கையின் முக்கிய ஏற்றுமதிகளாக அல்லது இறக்குமதி விடயங்களாக இல்லாதிருப்பதனால் ஐக்கிய அமெரிக்காவிற்கும் சீனாவிற்குமிடையில் நடைபெற்றுவரும் வர்த்தகப் போரானது இலங்கைக்கு நேரடி அச்சுறுத்தல்களை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படாத போதும் உலகளாவிய வர்த்தகத்தில் ஏற்படக்கூடிய மெதுவான தன்மை இலங்கையின் ஏற்றுமதி வருவாய்களின் மீது சில மறைமுகமான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடும். அதேவேளை, இறக்குமதிச் செலவினமும் 2019இல் அதிகரிக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது எனினும் 2018 உடன் ஒப்பிடுகையில் அது மெதுவானதாகவே இருக்கும். நாட்டிற்குள்ளேயான மேலதிகத் தீர்வுகளை அகற்றுதல் போன்ற வர்த்தகத் தாராளமயமாக்கல் வழிமுறைகள், பன்னாட்டுச் சந்தையில் காணப்படும் உயர்வான பண்ட விலைகள் குறிப்பாக எண்ணெய் விலைகள் மற்றும் ஏற்றுமதிகளில் எறிவு செய்யப்பட்ட உயர்வுகள் என்பன இறக்குமதிச் செலவினத்தை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், செலாவணிச் சீராக்கங்களின் காரணமாக ஏற்படுகின்ற உயர்ந்த இறக்குமதி விலைகள், இன்றியமையாதனவல்லாத நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி மீதான கேள்வியை ஓரளவிற்குக் குறைக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. வட்டிக் கொடுப்பனவு நியதிகளில் முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள், பங்கிலாபக் கொடுப்பனவுகள் மற்றும் மீள்முதலீட்டு வருவாய்கள் என்பன உலகளாவிய வட்டி வீதங்களில் ஏற்படும் உயர்வு, வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் மேலும் விரிவாக்கம் மற்றும் உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என்பன 2019இல் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையில் விரிவாக்கத்தினைத் தோற்றுவிக்கும் என எறிவு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை, பணிகளின் ஏற்றுமதிகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான வருவாய்கள், வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் முதலாந்தர வருமானப் பற்றாக்குறையின் கணிசமான பங்கிற்கு நிதியிடுமென எதிர்பார்க்கப்படுவதன் மூலம் 2019இல் நடைமுறைக் கணக்கில் மேம்பாடொன்றிற்கு இது பங்களிக்கும். சுற்றுலா, போக்குவரத்து மற்றும் தகவல் தொழில்நுட்பம்/வெளியிலிருந்து பணிகளை பெற்றுக்கொள்ளுதல் ஆகிய பணிகளில் இருந்தான வருவாய்களுடன் பணிகளின் ஏற்றுமதிகள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் 2018 - 2022 இற்கான தேசிய நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டவாறு நடவடிக்கைத் திட்ட தொடர்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் தேசிய ஏற்றுமதி உபாயத்தின் கீழ் எடுக்கப்படவுள்ள முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பணிகள் துறையானது மேலும் வலுப்படுத்தப்படும். எண்ணெய் விலைகளில் ஏற்படும் அதிகரிப்புக்களிலிருந்தும் இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்காக மத்திய கிழக்குப் பிராந்தியத்திலிருந்து கூடுதலான கேள்வியின் எதிர்பார்ப்பினாலும் பகுதியளவில் நன்மைகளைப் பெற்று தொழிலாளர் பணவனுப்பல்களும் மீளெழுச்சிக்கு உள்ளாகுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

- **வெளிநாட்டு முதலீட்டாளர்களின் தற்போது இடம்பெற்றுவரும் சொத்துப் பட்டியலை மீளச் சமநிலைப்படுத்தும் உபாயத்தின் காரணமாக அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பனவற்றில் இருந்து ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் வெளிப்பாய்ச்சல்கள் எதிர்பார்க்கப்படுகின்ற போதும் சென்மதி நிலுவையின்**

5

**நிதியியல் கணக்கிற்கு 2019இல் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.** இவ் உட்பாய்ச்சல்கள் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், திட்டமிடப்பட்ட பண்டா மற்றும் சாமுராய் முறிகளின் வழங்கல்கள், ஐக்கிய அமெரிக்க டொலரில் குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கான முறிகள் மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகளுடனான வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல் வசதிகள் என்பனவற்றினை உள்ளடக்கும். குறிப்பாக, கொழும்பு துறைக நகரச் செயற்றிட்டத்தின் முதலீடுகள், அம்பாந்தோட்டைத் துறைமுகத்துடன் தொடர்பான கைத்தொழில் வலயம் என்பனவற்றின் காரணமாக 2018இன் பின்னரைப்பகுதியிலும் அதற்கு அப்பாலும் உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கான சிறந்த வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. சவால்கள் காணப்பட்ட போதும், 2019 - 2023 காலப்பகுதியில் பெரும் தொகையான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் தீவிரமான பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் மற்றும் நடுத்தர கால படுகடன் முகாமைத்துவ உபாயம் என்பனவற்றுடன் முன்மதியுடன் முகாமைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. எனினும், பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்பும் விதத்தில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு நாட்டிற்கான பன்னாட்டு முறி, கூட்டுக் கடன்கள் மற்றும் ஏனைய நீண்ட காலக் கடன்கள் போன்ற படுகடன் பாய்ச்சல்களின் மீது இலங்கை தங்கியிருப்பது நீண்ட காலத்தில் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய உபாயமொன்றல்ல. வெளிநாட்டுத் துறையில் வர்த்தகம் மற்றும் முதனிலை வருமானக் கணக்குகளில் காணப்படும் பாரிய பற்றாக்குறை மற்றும் வெளிநாட்டுப் படுகடனின் திரட்சி போன்ற வெளிநாட்டுத் துறையில் காணப்படும் விடாப்பிடியான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வு, உற்பத்திப் பொருளாதாரத்தை ஊக்குவிப்பது மற்றும் வணிகப்பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதி என்பனவற்றின் ஊடாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் மீது கவனம் செலுத்துகின்ற அதேவேளையில் உயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கு முதலீட்டாளர் சிநேகபூர்வ சூழ்நிலையொன்றை உருவாக்குவதிலேயே தங்கியிருக்கும்.

5